

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பஹ்ரைனில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய இளையோர் விளையாட்டு தடகள போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனை எட்வினா ஜேசனுக்கு நேற்று (29.10.2025) 25.00 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 24.10.2025 முதல் 26.10.2025 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 விளையாட்டு வீரர், வீரங்கனைகளுக்கு நேற்று (29.10.2025) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 15.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2025) திருவேற்காட்டில் நடைபெற்ற Grace World Group of Super Markets நிறுவனர் கிரேஸ் சுதாகர் மகள் கிரேஸ் செல்சியா ஆலன் பால் ஐசக் ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் ஆவடி சா.மு. நாசர், மனோ தங்கராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் மணமக்களின் வீட்டார் உடனிருந்தனர்.






தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2025) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற "சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025" போட்டிகளை பொதுமக்களுடன் அமர்ந்து பார்த்து ரசித்தார். இந்நிகழ்வில் நா.எழிலன் எம்.எல்.ஏ. , கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, உயர் அதிகாரி ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் தலைவர் விஜய் அமிர்தராஜ், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# 8 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.40.50 லட்சம் ஊக்கத் தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக்.30-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டு தடகளப் போட்டி மற்றும் 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன் ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று (29.10.2025) மொத்தம் 40.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கி, மேலும் பல பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 2025 அக்டோபர் 24 முதல் 26 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டும் பேட்டி பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்க பதக்கம் வென்ற தடகள வீரர் ஆர்.மானவ் அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 100 மீட்டர் தடை தாண்டும் பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கே.நந்தினி அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீட்டர் (கலப்பு) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 4x400 மீட்டர் (பெண்கள்) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 400 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கம் மற்றும் 400 மீட்டர் தடைதாண்டுதல் பிரிவில் வெண்கல பதக்கம் என 4 பதக்கங்கள் வென்ற ஒலிம்பா ஸ்டெஃபி அவர்களுக்கு 6,50,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீ (ஆண்கள்) ரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் எம்.ஷரன் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, டிரிபிள் ஜம்ப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் வி. தினேஷ் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, உயரம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரர் ஆதர்ஷ் ராம் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை, நீளம் தாண்டுல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை பவானியாதவ் பகவ் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை என தடகள போட்டிகளில் பதக்கங்களை வென்ற 7 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 15.50 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் மெட்லிரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற எட்வினாஜேசன் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 20.00 லட்சம் மற்றும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 5.00 லட்சம் என மொத்தம் 25,00,000 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய தினம் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர் வீரங்கனைகளுக்கு மொத்தம் தொகை 40,50,000 ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் திருமதி.சி.லதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 252 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, அக். 30 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 252 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (29.10.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 104, தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு 2) வட்டம் 104அ, என்.வி.என் திருமங்கலம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*





*இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு. எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

### 'திராவிட மாடல்' அரசுக்கு அரசியல் உள்நோக்கத்தோடு

# களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது!

## அமைச்சர் கே.என்.நேரு கண்டன அறிக்கை!

சென்னை, அக்.30-

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் நிரப்பப்பட்ட நேரடி நியமனங்கள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் அறிக்கை வருமாறு :



திராவிட மாடல் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற அரசியல் உள்நோக்கத்தோடு, பல ஆண்டு காலத்திற்கு முந்தைய வங்கி வழக்கு ஒன்றினை தூசு தட்டி எடுத்து, அதனை ஊதிப் பெரிதாக்கும் முயற்சியில் தோற்றுப் போன ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ள மேலும் ஒரு முயற்சி தான், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணி நியமனம் குறித்த நேற்றைய கடிதம்.

2011ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு வரையுள்ள பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போதிய நியமனங்கள் செய்யப்படாமல், காலிப் பணியிடங்கள் அதிகமாகி நிர்வாகத்தை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்த நிலையில், 2019 பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்ப வேண்டும் என்பதற்காக, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக கடந்த 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பிற பணியிடங்களையும் சேர்த்து, 2,569 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இப்பணியிடங்களை வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற முறையில் நிரப்புவதற்காக, தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுவதற்கென தனியாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு, அந்த இணையதளம் மூலமாக, 2 இலட்சத்து 499 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு இணையவழியில் நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக, 38 மாவட்டங்களில் உள்ள 591 மையங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்த எழுத்துத் தேர்வுகள் அனைத்தும், அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்டு, எழுத்துத் தேர்வு முடிவுகளும் இணைய தளத்தில் 20.9.2024 அன்று வெளியிடப்பட்டன. நியாயமான முறையில் தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதால், இந்தத் தேர்வில் கலந்து கொண்ட இலட்சக் கணக்கான விண்ணப்பதாரர்களிடமிருந்து ஒரு ஆட்சேபணை கூட பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, பல்வேறு பணியிடங்களுக்கு, பணித் தகுதியின் அடிப்படையில், அதிகாரிகளைக் கொண்ட தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பதவிகளுக்கு 13 தேர்வுக் குழுவினால் 7 ஆயிரத்து 272 தேர்வர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பும் நேர்முகத் தேர்வுகளும் நடத்தப்பட்டன. இந்த சான்றிதழ் சரிபார்ப்பும், நேர்முகத் தேர்வுகளும் முடிவுற்ற பின்னர், இறுதித் தேர்வு முடிவுகள் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையிலும், கலந்தாய்வு முறையிலும், இறுதியாக 2,538 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நேரடி நியமனம் தொடர்பாக பல்வேறு வழக்குகளும், தடையாணைகளும் நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 4.7.2025 அன்று, அனைத்து தடைகளும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்ட நிலையில், இறுதித் தேர்வுப் பட்டியலும் வெளியிடப்பட்டது.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணியாணைகள் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. இத்தகைய ஒரு வரலாற்றுச் சாதனை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் நிகழ்த்தப்பட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், இதற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அமலாக்கத் துறை மூலமாக ஒன்றிய அரசு இத்தகைய அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இத்தேர்வுகளை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்திய அண்ணா பல்கலைக்கழகமானது, உலகில் தலைசிறந்த சுயாட்சி பல்கலைக் கழகங்களுள் ஒன்று என்பதையும், இப்பல்கலைக்கழகம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நகராட்சி நிர்வாகத் துறையின் எந்தவிதக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது அல்ல என்பதையும் அனைவரும் அறிவார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலும், அதாவது கடந்த 2012, 2013, 2014, 2015 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு பதவிகளுக்கு இதே அண்ணா பல்கலைக்கழகம் மூலமாகத் தான் தேர்வுகள் நடத்தப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இந்நிலையில், கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வுகளில் மட்டும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் தலையிட்டதால் தவறுகள் நிகழ்ந்துள்ளன என்ற கூற்று நகைப்புக்குரியது.

இரண்டு இலட்சம் தேர்வர்கள் விண்ணப்பித்து, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதி, ஒளிவு மறைவற்ற முறையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு, இறுதியாக 2,538 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சிறப்பாகப் பணிபுரிந்து வரும் நிலையில், இவ்வாறு களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது. அரசியல் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றை முறியடிக்கத் தேவையான அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு மறுப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# ஆஸ்திரேலியாவில் - உலகளாவிய மனிதநேய மாநாடு!

## கார்த்திகேய சிவசேனாபதி நிறைவுரையாற்றுகிறார்!

*சென்னை, அக். 30 -*

*ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உலகளாவிய மனிதநேய மாநாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நல வாரிய தலைவர் கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி நிறைவுரையாற்றுகிறார்.*

*வருகின்ற01.11.2025 சனிக்கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறும் மனிதநேய மாநாட்டில், தமிழ்நாடு அரசு, புலம்பெயர்ந்த தமிழர்கள் நல வாரியத்தின் முதல் தலைவர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாக*



*அறங்காவலரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சுற்றுச்சூழல் அணிச் செயலாளருமான கார்த்திகேய சிவசேனாபதி "செயலில் மனிதநேயம் : நிலையான எதிர்காலத்திற்கான சுதேச ஞானம் மற்றும் சுற்றுச்சூழல் நெறிமுறைகள்" என்ற தலைப்பில், பாரம்பரிய சூழலியல் ஞானம் மற்றும் கலாச்சார விழுமியங்கள் உலக வளர்ச்சியின் மிகவும் இரக்கமுள்ள மற்றும் நிலையான மாதிரிக்கு வழிகாட்டும் கொள்கைகளாக எவ்வாறு செயல்பட முடியும் என்பதில் கவனம் செலுத்து பற்றியும், பூர்வீக கால்நடை பாதுகாப்பு, நிலையான விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்ந்தோர் நலன் ஆகியவற்றில் அவரது விரிவான பணியை எடுத்துரைத்தும், மனிதநேயம் என்பது ஒரு தத்துவம் மட்டுமல்ல, மாறாக பகுத்தறிவு, பச்சாதாபம் மற்றும் வாழ்க்கையின் அனைத்து வடிவங்களுக்கும் ஒருங்கிணைக்கும் ஒரு நடைமுறை நெறிமுறை என்பதை வலியுறுத்தியும், காங்கயம் கால்நடை பாதுகாப்பு அமைப்பு போன்ற தமிழ்நாட்டின் உள்நாட்டு நடைமுறைகள் மனித செழுமையையும் சூழலியல் பாதுகாப்பையும் சமநிலைப்படுத்தும் ஒரு உயிருள்ள மனிதநேய அணுகுமுறையை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை எடுத்துக்காட்டியும்,*

*"உண்மையான மனிதநேயம் உயிர்களை அதன் அனைத்து வடிவங்களிலும் பாதுகாப்பதில் உள்ளது விவசாயி மற்றும் காடு, பாரம்பரியம் மற்றும் வாழ்விடம் இரண்டையும் மதிப்பிடுவதில் உள்ளது. நமது பண்டைய ஞானம், நவீன காரணத்துடன் இணைந்தால், உலகிற்கு நிலையான மற்றும் மனிதாபிமான வழியை வழங்க முடியும்." மனிதநேய மாநாடு உலகளாவிய சிந்தனைத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து நெறிமுறைகள், சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை விரைவாக மாறிவரும் உலகில் மனித விழுமியங்களை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் நிறைவுரையாற்றுகிறார்.*





திருவள்ளூர் மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், நத்தம்பேடு ஊராட்சி பகுதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் கனமழை பாதிப்பு ஏற்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள நத்தம்பேடு பகுதியை சேர்ந்த 34 குடும்பங்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மளிகைப்பொருட்கள், ரொட்டி, பால், உடை, பாய், குடை, தலையனை உள்ளிட்ட நிவாரண தொகுப்புகளை வழங்கி, காலை சிற்றுண்டியை பரிமாறினார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ச.சசிகாந்த் செந்தில் எம்.பி, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் உள்ளனர்